**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவிடைமருதூர்**

**முன்னிலை:திரு.A. அப்துல்ரஹ்மான், B.Com., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 27 ம் நாள் வியாழக் கிழமை

**முன்னுரை பதிவேட்டு வழக்கு எண். 04/2026**

**(CNR.No. TNTJ 270006122026)**

------------

அரசுக்காக,

காவல் ஆய்வாளர்

திருவிடைமருதூர் காவல் நிலையம்,

குற்ற எண். 454/2025 ...குற்றமுறையிடுபவர்

/எதிர்/

1. ஹரிகரன் (எ) ஆகாஷ், வயது 21/2026,

த/பெ. மகாதேவன் (எ) மாதவன்

பிச்சைக்கட்டளை தெரு,

திருவிடைமருதூர் தாலுக்கா.

2. லாலி (எ) மணிகண்டன், வயது 37/2026,

த/பெ. கிருஷ்ணமூர்த்தி,

சுக்கிரவார கட்டளை தெரு,

திருவிடைமருதூர்.

3. மீமீ (எ) செந்தமிழ் செல்வன், 33/2026,

த/பெ. மதியழகன்,

இடத்தெரு, திருவிடைமருதூர் தாலுக்கா.

4. விஜய், வயது 28/2026,

த/பெ. இன்பா,

கல்லர்தெரு, பானாதுறை, கும்பகோணம் தாலுக்கா.

5. மருதுபாண்டி, வயது 32/2026,

த/பெ. தங்கவேலு,

ABDUL RAHMAN

Digitally signed by ABDUL RAHMAN
Date: 2026.08.27 16:14:51 +0100

கீழத்தூண்டில் விநாயகன் பேட்டை,

தற்போதைய முகவரி மகாதான வீதி,

திருவிடைமருதூர்.

6. மகாலிங்கம், வயது 27/2026,

த/பெ. நடராஜன்,

கீழத்தூண்டில் விநாயகன் பேட்டை,

திருவிடைமருதூர் தாலுக்கா.

7. மகேஷ், வயது 42/2026,

த/பெ. கிருஷ்ணமூர்த்தி,

3A சுக்கரவாரக் கட்டளை தெரு,

கீழத்தூண்டில் விநாயகன் பேட்டை,

திருவிடைமருதூர் தாலுக்கா.

8. ராஜ்குமார், வயது 33/2026,

த/பெ. பழனிவேலு,

மெயின்ரோடு, திருவாடுதுறை,

குத்தாலம் தாலுக்கா.

9. அசோக், வயது 28/2026,

த/பெ. மோகன்,

சன்னதித்தெரு, தாராசுரம்,

கும்பகோணம் தாலுக்கா.

10. முத்தரசன், வயது 31/2026,

த/பெ. சின்னையன்,

புதுத்தெரு, அன்னா நகர், உடையாலூர்,

கும்பகோணம் தாலுக்கா.

11. பிரபாகரன், வயது 44/2026,

த/பெ. ராமகிருஷ்ணன்,

வடக்குத் தெரு, குறிச்சி, பந்தநல்லூர்,

திருவிடைமருதூர் தாலுக்கா.

ABDUL RAHMAN

Digitally signed by ABDUL RAHMAN
Date: 2026.08.27 16:14:59 +0100

12. பிரசாந்த், வயது 33/2026,

த/பெ. ராமகிருஷ்ணன்,

வடக்குத்தெரு, குறிச்சி, பந்தநல்லூர்,

திருவிடைமருதூர் தாலுக்கா.

**13. லெட்சுமணன், (இறப்பு),**

**த/பெ. தெட்சிணாமூர்த்தி,**

**அன்னாநகர், உடையாலூர்,**

**கும்பகோணம் தாலுக்கா.**

14. மூத்தி (எ) மந்திரமூர்த்தி 36/2026,

த/பெ. பெருமாள்,

33 அன்னாநகர் காலனி, வீரவநல்லூர் அஞ்சல்,

திருநெல்வேலி மாவட்டம்.

15. பாடகலிங்கம் (எ) கொங்கானி, வயது 20/2026,

த/பெ. முருகன்,

10/4 களத்துமேட்டுத்தெரு, வீரவநல்லூர் அஞ்சல்,

திருநெல்வேலி மாவட்டம்.

16. சங்கரநாராயணன்(எ) சங்கரபாண்டி, வயது 28/2026,

த/பெ. முருகன்,

54/6 இந்திரா நகர், புதுகாலனி, காரகுறிச்சி,

புதுக்குடி அஞ்சல், திருநெல்வேலி மாவட்டம்.

17. ஜெயகுமார் (எ) பால்குட்டி, வயது 26/2026,

த/பெ. ராமசந்திரன்,

87 களத்துமேட்டுத் தெரு, வீரவநல்லூர் அஞ்சல்,

திருநெல்வேலி மாவட்டம்.

18. அஜித்குமார் (எ) கட்ட அஜித், வயது 28/2026,

த/பெ. குமார்,

களத்துமேட்டுத் தெரு, நைனார் காலனி,

ABDUL RAHMAN

Digitally signed by ABDUL RAHMAN
Date: 2026.08.27 16:15:09 +0100

வீரவநல்லூர் அஞ்சல்,

திருநெல்வேலி மாவட்டம்.

19. விஷ்வா, வயது 22/2026,

த/பெ. ரகுராமன்,

2A சௌகண்டி தோப்பு தெரு,

திருவிடைமருதூர் தாலுக்கா.

**20. அஜய், வயது 24/2026, (Spiltup)**

**த/பெ. ரமேஷ்,**

**மெயின்ரோடு, திருப்பணிபேட்டை,**

**திருவிடைமருதூர் தாலுக்கா.**

21. சேரன், வயது 27/2026,

த/பெ. சேகர்,

12 A ரயில்வே காம்பௌண்ட்,

திருவிடைமருதூர் தாலுக்கா.

22. சஞ்சய், வயது 23/2026,

த/பெ. சக்கராயுதம்,

24A பிச்சைக்கட்டளை தெரு,

திருவிடைமருதூர் தாலுக்கா. ....எதிரிகள்

**(இவ்வழக்கில் 13 வது எதிரி லெட்சுமணன், த/பெ. தெட்சிணாமூர்த்தி என்பவர் 08/09/2025 ம் தேதியன்று வழக்கு விசாரணைக்கு முன் இறந்துவிட்டதால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்றுபோய்விட்டது.)**

**(இவ்வழக்கில் 20 வது எதிரி – அஜய், வயது 24/2026, த/பெ.ரமேஷ் என்பவர் நீண்ட நாட்களாக நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவருடைய வழக்கு தனியாக பிறித்தெடுக்கப்பட்டு முன்னுரை பதிவேட்டு வழக்கு எண்.25/2026 என எண் கொடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.)**

ABDUL RAHMAN

Digitally signed by ABDUL RAHMAN
Date: 2026.08.27 16:15:16 +0100

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் 09/04/2026 அன்று முன்னுரை பதிவேட்டு வழக்கு எண்.04/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, குற்றமுறையிடுபவர் தரப்பில், கற்றறிந்த அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-I **திரு.I.பாண்டியராஜன்**,B.SC.,B.L.,MBA., அவர்களும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. S. பிரகதீஸ்வரன்**, B.A., B.L.L., அவர்கள் ஆஜராகியும், ஆவணங்கள் பரிசீலனைக்குப் பின்னர், இன்று இந்நீதிமன்றத்தால் அவையறிய பிறப்பிக்கப்படும்....

## உத்தரவு

இவ்வழக்கில் திருவிடைமருதூர் தாலுக்கா, மஞ்சமல்லி, சிந்தாமணி குடியானவர் தெருவில் பட்டியல் சாட்சி-1 அருண் என்பவர் அவருடைய பெற்றோர்களுடன் வசித்து வருவதாகவும், இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரான பட்டியல் சாட்சி-3 ம.க.ஸ்டாலின் என்பவர் ஆடுதுறை பேரூராட்சி தலைவராக பொறுப்பில் உள்ளதாகவும், மேற்படி நபரிடம் புகார்தாரர் வாகன ஓட்டுநராக பணிபுரிந்து வருவதாகவும், இவ்வழக்கில் 1வது எதிரி ஆகாஷ் என்பவர் திருவிடைமருதூர் பிச்சை கட்டளை தெருவில் வசித்து வருவதாகவும், 2 வது எதிரி லாலி (எ) மணிகண்டன் மற்றும் 7வது எதிரி மகேஷ் ஆகியோர்கள் 1வது எதிரியின் சித்தப்பாக்கள் என்றும், மற்ற 19 எதிரிகள் 1வது எதிரியுடன் குற்றச்சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாகவும், பட்டியல் சாட்சி-3 ம.க.ஸ்டாலின் என்பவரது தம்பியான ம.கா.ராஜா என்பவரை கடந்த 03/06/2015 அன்று 2 வது எதிரியான லாலி (எ) மணிகண்டன் மற்றும் சில நபர்களுடன் சேர்ந்து வெட்டி கொலை செய்துள்ளார்கள் என்றும், அது சம்மந்தமாக வழக்கு திருவிடைமதூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு, லாலி (எ) மணிகண்டன் கைது செய்யப்பட்டு கோயம்புத்தூர் சிறையில் இருந்து வந்தவரை நீதிமன்றத்தில் பிணை கிடைத்திருந்ததால் அவரை அவரது அண்ணனான மாதவன் (எ) மகாதேவன் இன்னும்

ABDUL RAHMAN Digitally signed by ABDUL RAHMAN Date: 2026.08.27 16:15:24 +0100

சிலரும் கோயம்புத்தூர் சென்று அழைத்து வரும்போது லாலி என்கிற மணிகண்டனை கொலை செய்ய முயற்சி நடந்த போது கோயம்புத்தூர் அருகில் உள்ள சூலூர் என்ற இடத்தில் வைத்து மகாதேவன் என்பரையும், அவருடன் வந்த மற்ற இரு நபர்களும் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்துள்ளார்கள் என்றும், அது தொடர்பாக சூலூர் காவல் நிலையத்தில் வழக்கு பதியப்பட்டுள்ளது என்றும், மேற்சொன்ன இருசம்பவங்கள் காரணமாக இரு தரப்பினர்களுக்கும் இடையே ஒருவரையொருவர் கொலை செய்ய வேண்டும் என்ற குற்றமுறு பொதுவான நோக்கத்துடன் ஒருவருக்கொருவர் கடும் விரோதத்தில் இருந்து வந்துள்ளார்கள் என்றும், 1 வது எதிரி சேலம் மத்திய சிறையில் இருந்து 2 வது எதிரியை சுமார் ஒரு மாதத்திற்கு முன்னால் சந்தித்து தனது தந்தை மகாதேவனை கொலை செய்தவர்களை பழிவாங்க வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்தி வந்ததாக 2 வது எதிரி லாலி (எ) மண்கண்டன், 3 வது எதிரி மீமீ (எ) செந்தமிழ் செல்வன் என்பவரை தொடர்புக் கொண்டு பேசியும், பட்டியல் சாட்சி-3 ம.க.ஸ்டாலினை கொலை செய்வதற்கு தூண்டுதலாகவும், அதற்காக திருநெல்வேலியை சேர்ந்த பழங்குற்றவாளிகளான 14 வது எதிரி மந்திரமூர்த்தி 15 வது எதிரியான பாடகலிங்கம், 16 வது எதிரியான சங்கரநாராயணன், 17 வது எதிரியான ஜெயக்குமார் மற்றும் 18 வது எதிரியான அஜித்குமார் ஆகியோர்களை அனுப்பிய வகையில் மற்ற எதிரிகளின் குற்ற செய்கைக்கு உடந்தையாக இருந்துள்ளார்கள்.

இந்நிலையில் இவ்வழக்கு சம்பவத்திற்கு சுமார் 1 வாரத்திற்கு முன்பாக 3 வது எதிரி செந்தமிழ் செல்வன் என்பவர் அவருக்கு சொந்தமான காளவாய் கொட்டகையில் வைத்து எதிரிகள் மருது பாண்டியன், மகேஷ் தாராசுரம், அசோக், முத்தரசன் ஆகியோர்கள் ஒன்று சேர்ந்து ம.க.ஸ்டாலினை கொலை செய்ய வேண்டும் என்று குற்றமுறு சதித்திட்டம் தீட்டியுள்ளனர் என்றும், அதன் தொடர்பாக சம்பவ சமயத்தில் உபயோகிப்பதற்காக TN 51 V

ABDUL RAHMAN
Digitally signed by ABDUL RAHMAN
Date: 2026.08.27 16:15:35 +0100

4567 என்ற பதிவெண் கொண்ட பழைய அம்பாசிடர் காரையும், TN 18 X 9443 என்ற பதிவெண் கொண்ட பழைய சபாரி காரையும் விலைக்கு வாங்கியுள்ளார்கள் என்றும், மேற்படி கார்களை வாங்குவதற்கு 8 வது எதிரி ராஜ்குமார் உதவியாக இருந்துள்ளார் என்றும், 3 வது எதிரி செந்தமிழ் செல்வன் 19 வது எதிரி விஷ்வா ஆகியோர்கள் மூலம் தேவையான பண பரிவர்த்தனைகளை செய்துள்ளார்கள் என்றும், வெளிநாட்டில் வசித்து வரும் 20 வது எதிரி அஜய் என்பவர் திருநெல்வேலியைச் சேர்ந்த 14 முதல் 18 எதிரிகளுக்கு குற்ற சம்பவத்தின் போது சேர்ந்து செயல்பட 15 வது எதிரி பாடகலிங்கம் என்பவரின் வங்கி கணக்கிற்கு பண பரிவர்த்தனை செய்துள்ளார் என்றும், சபாரி காரை சென்னையில் இருந்து எதிரி மருதுபாண்டி என்பவர் வாங்கி வரும்போது அவருக்கு ஏற்கனவே தெரிந்த எதிரி மகாலிங்கம் என்பவரையும் தன்னுடன் அழைத்து கொண்டு வந்துள்ளார் என்றும், சம்பவத்திற்கு சுமார் 3 நாட்களுக்கு முன்பாக எதிரிகள் தாராசுரம் அசோக், லெட்சுமணன், பிரபாகரன் ஆகியோர்களை உடையளூரிலுள்ள ஒரு காலவாய் அருகே வைத்து எதிரிகள் ஆகாஷ் (எ) ஹரிஹரன் விஜய், மகாலிங்கம் ஆகியோரை சந்தித்து 5 நாட்டு வெடிகுண்டுகள் தயாரிக்கச் சொல்லியும், அதற்கு 3 வது எதிரி கொடுத்து வைத்திருந்த பணத்தை அசோக்கிடம் எதிரி விஜய் என்பவர் கொடுத்துள்ளார் என்றும், அதன் 03/09/2025 ம் தேதியன்று எதிரி மருதுபாண்டியன் வீட்டில் வைத்து எதிரிகள் மருதுபாண்டி, ஆகஷ்(எ) ஹரிகரன் மகேஷ், மீமீ(எ)செந்தமிழ்செல்வன், மகாலிங்கம், ராஜ்குமார், சேரன், சஞ்சய், விஷ்வா, ஆகியோர் ஒன்று கூடி ம.கா.ஸ்டாலினை கொலை செய்வதற்காக பொருட்களை எல்லாம் தயாராக வைத்துக் கொள்ள சொல்லியும், 17 வது எதிரி ஜெயகுமார் 7 வது எதிரி மகேஷ் 10 வது எதிரி முத்தரசன் 22 வது எதிரி சஞ்சய், 19 வது எதிரி விஷ்வா மற்றும் 21 வது எதிரி சேரன் ஆகியோர்களை பட்டியல் சாட்சி-3 ம.கா.ஸ்டாலின் அன்றாட

ABDUL RAHMAN
Digitally signed by ABDUL RAHMAN
Date: 2026.08.27 16:15:43 +0100

நடவடிக்கைகளை கண்காணித்து வரச் சொல்லியும், அவர் பேரூராட்சி அலுவலகத்திற்கு வரும் வழியாக உளவு பார்த்து செல்வதற்காகவும் ஒன்றுகூடி பேசி கூட்டு சதி திட்டம் தீட்டியுள்ளார்கள் என்றும், அதன் தொடர்சியாக எதிரிகள் லெட்சுமணன், பிரபாகர் மற்றும் பிரசாந்த் ஆகியோர் நாட்டு வெடிகுண்டுகளை தயார் செய்தும், 5 நாட்டு வெடிகுண்டுகள் மற்றும் 6 அருவாள்களை எதிரி மருதுபாண்டியன் வீட்டில் தயார் செய்து வைத்து விட்டு எதிரிகள் அனைவரும் மேற்சொன்ன 2 கார்களிலும் ஏறி 04/09/2025 ம் தேதியன்று பட்டியல் சாட்சி-3 ம.கா.ஸ்டாலினை கொலை செய்ய சென்ற போது எதிரிகள் ஆகாஷ், மருதுபாண்டி, மகாலிங்கம், ராஜ்குமார், ஆகியோர் வந்த அம்பாசிடர் வாகனம் பழுதாகி விட்டதால் அன்றைய தினம் எதிரிகளின் திட்டம் நிறைவேறவில்லை என்றும், மீண்டும் 05/09/2025 ம் தேதியன்று பகல் நேரத்தில் பட்டியல் சாட்சி-3 ம.க.ஸ்டாலின் என்பவர் ஆடுதுறை பேரூராட்சி அலுவலகத்தில் இருப்பதை தெரிந்து அவரையும், மற்ற பொது நபர்களின் நடமாட்டத்தையும் எதிரிகள் முத்தரசன், ராஜ்குமார், சேரன் சஞ்சய், மகேஷ் மற்றும் விஷ்வா ஆகியோர் கண்காணித்து மற்ற எதிரிகளுக்கு உதவியாகவும், உடந்தையகாவும், இருந்து உலவு சொல்லியுள்ளார்கள் என்றும், TN 18 X 9443 என்ற பதிவெண் கொண்ட சபாரி காரில் எதிரிகள் விஜய், சங்கரபாண்டி, மந்திரமூர்த்தி, கொங்கனி, பார்த்தி, ஆகாஷ், மருதுபாண்டி, ராஜ்குமார், அசோக், மகாலிங்கம் ஆகியோர்கள் ஏறி கொண்டு திருவிடைமருதூர் செல்லும்போது உடையாளூர் சென்று எதிரி மருதுபாண்டியனின் வீட்டிலிருந்த 5 நாட்டு வெடிகுண்டுகள் மற்றும் 6 பட்டா அருவாள்களையும் எடுத்துக் கொண்டு ஆடுதுறைக்கு பிற்பகல் 01.00 மணிக்கு வந்து சேர்ந்துள்ளனர் என்றும், காரை எதிரி விஜய் ஓட்டி செல்ல ஆடுதுறை பேரூராட்சி அலுவலகம் முன்பு காரை நிறுத்திவிட்டு பிற்பகல் சுமார் 01.00 மணியிலிருந்து 01.30 மணிக்குள் எதிரிகள் அனைவரும் காரில் இருந்து இறங்கி செல்லும்

ABDUL RAHMAN

Digitally signed by ABDUL RAHMAN
Date: 2026.08.27 16:15:52 +0100

போது எதிரிகள் மகாலிங்கம், மருதுபாண்டி, விஜய் ஆகியோர் காரிலிருந்து நாட்டு வெடிகுண்டுகளை எடுத்து கொண்டும் மற்ற எதிரிகள் ஆளுக்கொரு பட்டா அருவாளுடனும் ஆடுதுறை பேரூராட்சி அலுவலகத்தில் இருந்த பட்டியல் சாட்சி-3 ம.க.ஸ்டாலின் என்பவரை கொலை செய்ய வேண்டும் என்ற குற்றமுறு பொதுவான என்னத்தோடு அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்தும், ஸ்டாலின் எங்கடா என்று சத்தம் போட்டுக்கொண்டே செல்லும்போது எதிரி மருதுபாண்டி கையில் வைத்திருந்த வெடிகுண்டை வாசற் படியில் ஓங்கி அடித்துள்ளார் என்றும், அதன் காரணமாக அருகாமையில் இருந்த சாட்சி விஜய் என்பவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது என்றும், பிறகு எதிரி விஜய் தனது கையிலிருந்த நாட்டு வெடிகுண்டால் அங்கிருந்த கதவில் ஓங்கி அடித்து வெடித்து சிதறியதில் தரை மற்றும் மரக்கதவு, அலுமினிய பீடிங் உள்ள கண்ணாடி கதவுகள் மற்றும் பிளாஸ்டிக் சேர்கள் சேதமானதில் பேரூராட்சி அலுவலகத்திற்கு சுமார் ரூ.2,30,000/- மதிப்புள்ள பொருட்கள் சேதமாகியுள்ளது என்றும், எதிரிகள் அனைவரும் "எங்கடா ஸ்டாலின் குச்சிகாரி மகன் என்றும், எங்க தலைவன் செந்தமிழ் செல்வனையே எதுக்க பாக்குறானா அவனை இன்றே கொன்று கதையை முடித்து விடுகிறோம்" என்றும், அசிங்கமாக சத்தம் போட்டுக் கொண்டே பட்டியல் சாட்சி-3 ம.க.ஸ்டாலினை தேடி அறைக்குள் சென்றபோது ஸ்டாலின் கொல்லைப் புறமாக ஓடி விட்டதாக சொன்னவுடன் கொல்லைப் பக்கம் போன எதிரிகளை தடுக்கும் விதமாக பட்டியல் சாட்சி-2 இளையராஜா என்பவர் கொல்லை கதவை மூடியபோது எதிரி ஆகாஷ் என்பவரை "நீ என்ன ஸ்டாலினை காப்பாத்துறியா குச்சிகாரி மவனே" என்று சத்தம் போட்டும் இத்தோடு நீயும் சொலைந்து போடா என்று எதிரி ஆகாஷ் கையில் வைத்திருந்த பட்டா அருவாளால் பட்டியல் சாட்சி-2 இளையராஜாவை ஓங்கி வெட்டிய போது அவருக்கு வலது முன் கையில்

ABDUL RAHMAN
Digitally signed by ABDUL RAHMAN
Date: 2026.08.27 16:16:00 +0100

வெட்டுப்பட்டுள்ளது என்றும், எதிரிகள் அசோக், ராஜ்குமார், மந்திரமூர்த்தி, பாடலிங்கம், சங்கரநாராயணன் ஆகியோர் ஆளுக்கொரு அருவாள்களை கையில் வைத்துக் கொண்டு அங்கு அலுவலகத்தில் இருந்தவர்களை பார்த்து கொலை மிரட்டல் விடுத்துள்ளார்கள் என்றும், அதே சமயத்தில், எதிரி மருதுபாண்டி அவரது கையில் வைத்திருந்த ஒரு நாட்டு வெடிகுண்டை எல்லோரும் சாகுங்கடா என்று சொல்லி தரையில் ஓங்கி அடித்த போது அது பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறி அலுவலகத்தில் உள்ள தரைகளுக்கு ரூ.2,30,000/- அளவிற்கு கடுமையான சேதம் ஏற்படுத்தியுள்ளது என்றும், அதன் பிறகு எதிரிகள் அனைவரும் இன்று ஸ்டாலின் தப்பிச்சிட்டான் என்னைக்கு இருந்தாலும் அவன் கதையை முடிக்காமல் விடமாட்டோம் என்று மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1 வது எதிரி மீது பிரிவுகள் 191(2), 191(3), 332(b), 109(1), 118(1), 296(b), 351(3)BNS and 25(1A), 27(2) Arms Act and 3(a) of Explosive substances Act and 3(1) TNPPDL Act 61, 190, 118(2), BNS-ன் கீழும், 2 வது எதிரியின் மீது பிரிவுகள் 109(1) BNS and 25(1A), 27(2) Arms Act and 3(a), 6 Explosive substances Act and 3(1) TNPPDL Act and 49 BNS-ன் கீழும், 3 வது எதிரியின் மீது பிரிவுகள் 109(1) BNS and 25(1A), 27(2) Arms Act and 3(a), 6 Explosive substances Act and 3(1) TNPPDL Act and 49, 61 BNS ன் கீழும், 4 முதல் 6 எதிரிகள் மீது பிரிவுகள்191(2), 191(3), 332(b), 109(1), 296(b), 351(3)BNS and 25(1A), 27(2) Arms Act and 3(a) Explosive substances Act and 3(1) TNPPDL Act and 61, 190, 118(2), BNS ன் கீழும், 7 முதல் 10 எதிரிகள் மீது பிரிவுகள் 191(2), 109(1) BNS and 25(1A), 27(2) Arms Act and 3(a), Explosive substances Act and 3(1), 5 TNPPDL Act and 49, 61, 54 BNS ன் கீழும், 11 முதல் 13 எதிரிகள் மீது பிரிவுகள் 191(2), 109(1) BNS and 25(1A), 27(2) Arms Act and 3(a), 6 Explosive substances Act and 3(1), 5 TNPPDL Act and 49, 61, 54 BNS-ன் கீழும், 14, 15, 16, 18 எதிரிகள் மீது பிரிவுகள் 191(2),

ABDUL RAHMAN
Digitally signed by ABDUL RAHMAN
Date: 2026.08.27 16:16:07 +0100

191(3), 332(b), 109(1), 296(b), 351(3) BNS and 25(1A), 27(2) Arms Act and 3(a), 6 Explosive substances Act and 3(1), 5 TNPPDL Act and 49, 61, 118(2), 54 BNS ன் கீழும், 20 வது எதிரி மீது பிரிவுகள் 109(1) BNS and 25(1A), 27(2) Arms Act and 3(a), 6 Explosive substances Act and 3(1), 5 TNPPDL Act and 49 BNS ன் கீழும், 17, 19, 21, 22 எதிரிகள் மீது பிரிவுகள் 109(1) BNS and 25(1A), 27(2) Arms Act and 3(a), 6 Explosive substances Act and 3(1), 5 TNPPDL Act and 49 BNS ன் கீழும் திருவிடைமருதூர் காவல் ஆய்வாளர் ஒரு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கின் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும், அரசு தரப்பில் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும், பிரிவு 230BNSS-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3) இவ்வழக்கில் எதிரிகள் மீது பிரிவுகள் 109(1) BNS and 25(1A), 27(2) Arms Act and 3(a), 6 Explosive substances Act and 3(1), 5 TNPPDL Act-ன் கீழான குற்றம் மாண்பமை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க வழக்கு என்பதால், இவ்வழக்கை உரிய விசாரணைக்காக மாண்பமை தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு பிரிவு 232(ஆ) BNSS-ன் கீழ் சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

4) இவ்வழக்கில் 1வது எதிரி மதுரை நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில், குற்றவியல் பல்வகை மனு எண். 4223/2025 ம் 12/09/2025 தேதியன்று சரணடைந்து, இந்நீதிமன்ற உத்ரவின் படி 06/04/2026 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார். 1வது எதிரி குற்ற எண்.612/2026 என்ற வழக்கில் திருச்சி மத்திய சிறையில் காவலில் இருந்து வருகிறார். அவரை பி.டி. வாரண்ட் மூலமாக இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

ABDUL RAHMAN

Digitally signed by ABDUL RAHMAN
Date: 2026.08.27 16:16:16 +0100

2 வது எதிரி லாலி (எ) மணிகண்டன் குற்ற எண்.236/2013 என்ற வழக்கில் பி.டி. வாரண்ட் மூலமாக இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, இந்நீதிமன்றத்தில் மேற்படி வழக்கில் கைது செய்யப்பட்டு, கடந்த 14/10/2025 ம் தேதியிலிருந்து சேலம் மத்திய சிறையில் காவலில் இருந்து வருகிறார்.

3 வது எதிரி மண்பமை மதுரை கிளை, சென்னை உயர்நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்.16538/2025-ல், நாள் 14/10/2025 உத்தரவின்படி முன்பிணையில் சென்றுள்ளார். இந்நீதிமன்றத்தில் சரணடைந்து 30/10/2025-ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார். 3 வது எதிரி குற்ற எண்.771/2026 என்ற வழக்கில் புதுக்கோட்டை மாவட்ட சிறையில் காவலில் இருந்து வருகிறார். அவரை பி.டி. வாரண்ட் மூலமாக இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

4 வது எதிரி மதுரை நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில், குற்றவியல் பல்வகை மனு எண். 4223/2025 ம் 12/09/2025 தேதியன்று சரணடைந்து, இந்நீதிமன்ற உத்ரவின் படி 06/04/2026 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.

5 வது எதிரி 10/09/2025 ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு இந்நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண். 485/2025-ல் 24/12/2025 ம் தேதியிட்ட உத்தரவின்படி 06/04/2026 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.

6 வது எதிரி மதுரை நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில், குற்றவியல் பல்வகை மனு எண். 4223/2025 ம் 12/09/2025 தேதியன்று சரணடைந்து, இந்நீதிமன்ற உத்ரவின் படி 30/12/2025 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார். 6 வது எதிரி குற்ற எண்.321/2026 என்ற வழக்கில் திருச்சி மத்திய சிறையில் காவலில் இருந்து வருகிறார். அவரை பி.டி. வாரண்ட் மூலமாக இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

ABDUL RAHMAN

Digitally signed by ABDUL RAHMAN
Date: 2026.08.27 16:16:23 +0100

7 வது எதிரி 10/09/2025 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் காவலுக்குட்படுத்தப்பட்டு, இந்நீதிமற்குற்றவியல் பல்வகை மனு எண்.485/2025-ல் நாள் 24/12/2025 ம் தேதியிட்ட உத்தரவின்படி 06/04/2026 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.

8 வது எதிரி மண்பமை மதுரை கிளை, சென்னை உயர்நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்.15668/2025-ல், நாள் 19/09/2025 உத்தரவின்படி முன்பிணை பெற்று இந்நீதிமன்றத்தில் சரணடைந்து 19/02/2026 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.

9 வது எதிரி மாண்பமை தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்.612/2026-ல் 03/02/2026 ம் தேதியிட்ட உத்தரவின் படி முன்பிணை பெற்று, இந்நீதிமன்றத்தில் சரணடைந்து 19/02/2026 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.

10 வது எதிரி மண்பமை மதுரை கிளை, சென்னை உயர்நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்.17369/2025-ல், நாள் 13/10/2025 உத்தரவின்படி முன்பிணை பெற்று இந்நீதிமன்றத்தில் சரணடைந்து 03/11/2025 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.

11 வது எதிரி 05/11/2025 ம் தேதி இந்நீதிமன்றத்தில் சரணடைந்து குற்றவியல் பல்வகை மனு எண்.48/2026-ல் 18/03/2026 ம் தேதியிட்ட உத்தரவின்படி பிணையில் சென்றுள்ளார். 6 வது எதிரி குற்ற எண்.321/2026 என்ற வழக்கில் திருச்சி மத்திய சிறையில் காவலில் இருந்து வருகிறார். அவரை பி.டி. வாரண்ட் மூலமாக இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

12 வது எதிரி மாண்பமை தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்.6061/2025-ல் 31/10/2025 ம் தேதியிட்ட உத்தரவின் படி முன்பிணை பெற்று, இந்நீதிமன்றத்தில் சரணடைந்து 18/03/2026 ம் தேதியன்று பிணையில்

ABDUL RAHMAN

Digitally signed by ABDUL RAHMAN
Date: 2026.08.27 16:16:31 +0100

சென்றுள்ளார்.

14 முதல் 18 வரையிலான எதிரிகள் 21/09/2025 ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு மாண்பமை தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்.6062/2025-ல் 31/10/2025 ம் தேதியிட்ட உத்தரவின் படி 25/11/2025 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளனர். இதில் 16 வது எதிரி குற்ற எண்.525/2026 என்ற வழக்கில் பளையம்கோட்டை மத்திய சிறையில் காவலில் இருந்து வருகிறார். அவரை பி.டி. வாரண்ட் மூலமாக இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

19 வது எதிரி 19/09/2025 ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு மதுரை கிளை சென்னை உயர் நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்.16901/2025-ல் 03/10/2025 ம் தேதியிட்ட உத்தரவின்படி 06/10/2025 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.

21 வது எதிரி 10/09/2025 ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு இந்நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்.485/2025-ல் 24/12/2025 ம் தேதியிட்ட உத்தரவின் படி 30/12/2025 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.

22 வது எதிரி 10/09/2025 ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு இந்நீதிமன்ற குற்றவியல் பல்வகை மனு எண்.485/2025-ல் 24/12/2025 ம் தேதியிட்ட உத்தரவின் படி 30/12/2025 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார். வழக்கு விசாரணையின் போதும், வழக்கு முடிவடையும் வரையிலும் எதிரிகள் தொடர்ந்து பிணையில் இருந்து வர பிரிவு 232(ஆ)BNSS-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

5) இவ்வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை மாண்பமை தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் சமர்பிக்க பிரிவு 232(ஆ) BNSS-ன் கீழ் கீழ் உத்தரவிடப்படுகிறது.

ABDUL RAHMAN

Digitally signed by ABDUL RAHMAN
Date: 2026.08.27 16:16:38 +0100

6) அரசு குற்றத்துறை வழக்கறிஞருக்கு இவ்வழக்கு மேல்விசாரணைக்காக அனுப்பப்பட்டதென்று 232(ஆ) BNSS-ன் கீழ் தகவல் தெரிவிக்க உத்தரவிடப்பட்டது.

7) எதிரிகள் வழக்கறிஞர் வைத்துக்கொள்ள வசதி உண்டு என்று கூறியுள்ளனர்.

8) எதிரிகள் 10/09/2026 தேதியன்று மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூரில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

சுருக்கெழுத்து தட்டச்சரிடம் என்னால் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 27 ம் நாள் வியாழக்கிழமை அவையறிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ABDUL RAHMAN

Digitally signed by ABDUL RAHMAN
Date: 2026.08.27 16:16:45 +0100

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
திருவிடைமருதூர்.